

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி, கழக இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில், எதிர்க்கட்சித் தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஆவடியை அடுத்த கோவர்தனகிரி பகுதியைச் சேர்ந்த மாணவர் ஜெகதீசனின் கல்விச் செலவிற்காக வழங்கிய ரூ.25 ஆயிரம் நிதியுதவி காசோலையை, திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் முன்னிலையில் வழங்கினார். இந்நிகழ்வில் மாநகரப் பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் சதீஷ் குமார் உடனிருந்தனர்.



விழுப்புரம் செஞ்சி மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பி.கே.பச்சையப்பன் சாலை விபத்தில் உயிரிழந்தார். தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட தி.மு.க.வினர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று விபத்தில் உயிரிழந்த பச்சையப்பன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

விருதுநகர் மாவட்டம்:

பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன் இல்லத் திருமண விழா!

மாவட்டக் கழகச் செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு வாழ்த்து!

விருதுநகர், நவ. 12-

விருதுநகர் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன் - பாண்டியம்மாள் தம்பதியரின் மகனான R.P.M.சூரியா என்பவருக்கும், ராமமூர்த்தி கலைச்செல்வி தம்பதியரின் மகளான ரா.ஹேமலதா என்பவருக்கும் வருகின்ற 15.11.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 7 மணி முதல் 8.30 மணிக்குள் விருதுநகர் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் திருமணமும் இதர வைபவங்கள் கற்கு வேல் அய்யனார் திருமண மண்டபத்தில் நடைபெற



உள்ளது. இத்திருமண விழாவிற்கு தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தங்கம் தென்னரசு பங்கேற்று மண மக்களை வாழ்த்த உள்ளனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், The Groups of Companies, Dubai சந்திரமாரி முரளிகுமார், சுரேஷ்பாபு ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத்திருமண விழாவிற்கு முன்னாள் சேர்மன் K.K.S.V.T.சுப்பாராஜ், தி.மு.க. நகர செயலாளர் S.R.S.தனபாலன், விருதுநகர் நகர்மன்ற தலைவர் S.R.S.R. மாதவன், மாவட்ட அணி அமைப்பாளர் K.G.ராஜகுரு, முன்னாள் சேர்மன் ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர் R.சுதாகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் R.கிருஷ்ணகுமார், வர்த்தக அணி அமைப்பாளர் போஸ் என்ற ஜெயச்சந்திரன், PRC பொதுச்செயலாளர்: ராஜா செல்வம், வர்த்தக அணி அமைப்பாளர் போஸ் (எ) ஜெயசந்திரன், PRC பொதுச் செயலாளர் ராஜ் செல்வம், இளைஞர் அணி துணை அமைப்பாளர் P.ஜெகன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திகேயன், சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் மித்ரு நாகேந்திரன், நகர இளைஞர் அணி நிர்வாகிகள் முகமது பாசில், R.அஜய் குமார், N.முத்துக்குமார், சக்தி விக்னேஷ், இஸ்ரவேல், ஆசிப், சதீஷ் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மாநகர, நகர, ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.

‘தூயசக்தி’ ஆட்சியில் தொடரும் கஞ்சா கடத்தல்!

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அருகே 12 கிலோ கஞ்சா பறிமுதல் – இருவர் கைது!

திருவள்ளூர், நவ.12

தமிழ்நாட்டில் த.வெ.க ஆட்சி அமைந்த பிறகு போதைப்பொருள் கடத்தல் தொடர்பான புகார்கள் தொடர்ந்து எழுந்து வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆந்திர மாநிலத்தில் இருந்து திருவள்ளூர் மாவட்டம் வழியாக கஞ்சா கடத்தப்படுவதாக வந்த புகாரைத் தொடர்ந்து, மாவட்ட எஸ்.பி. உத்தர வின்பேரில் போலீசார் தீவிர வாகன சோதனை யில் ஈடுபட்டனர்.



இதன்படி, ஊத்துக் கோட்டை அருகே நாகலாபுரம் சோதனைச் சாவடியில் இருசக்கர வாகனத்தில் வந்த இருவரை போலீசார் தடுத்து நிறுத்தி சோதனை யிட்டனர். அவர்கள் வைத்திருந்த பையில் சுமார் 12 கிலோ கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

விசாரணையில், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முத்துக்காளை (30), சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கார்த்திகேயன் (32) ஆகியோர் கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது. மேலும், திருவள்ளூர் சுற்று வட்டாரப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விற்பனை செய்ய கஞ்சா கொண்டு வந்ததும் தெரிய வந்தது.

இதையடுத்து இருவரையும் கைது செய்த போலீசார், கஞ்சாவைப் பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் மத்திய சிறையில் அடைத்தனர். இந்த சோப்பளாங்கி ஆட்சியில் போதைப்பொருள் கடத்தல் புகார்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. மாணவர்கள், இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் கஞ்சா புழக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழ்நாட்டில் வாக்காளர்கள் பெயர் நீக்கம்!

நவ.26-ல் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து பேரணி!

குடிமக்கள் கூட்டமைப்பு வலியுறுத்தல்!

சென்னை, நவ.12-

தமிழகத்தின் வாக்காளர் பட்டியலில் இருந்து 74.07 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த நீக்கங்கள் குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும், தகுதியுள்ள வாக்காளர்களின் பெயர்களை மீண்டும் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் சுதந்திர இளம் குடிமக்கள் கூட்டமைப்பு வலியு றுத்தியுள்ளது.

இது தொடர்பாக, சென்னை பிரஸ் கிளப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அப்போது, வரும் நவம்பர் 26ஆம் தேதி அண்ணா சாலையில் பேரணி நடத்தப்போவதாக வும் அந்த அமைப்பு அறிவித்தது. நாடு முழுவதும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கைக்கு (Special Intensive Revision - SIR) எதிராக நடைபெறும் போராட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பேரணி நடத்தப்பட உள்ளது.

வாக்காளர் பட்டியலில் இருந்து இவ்வளவு அதிக மான பெயர்கள் நீக்கப்பட்டிருப்பது, தேர்தல் நடைமுறை மற்றும் ஜனநாயகத்தின் மீதான கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், இந்த நடவடிக்கை ஜனநாயகத்திற்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் குறித்தும் கவலை தெரிவித்துள்ளது.

IYCC அமைப்பானது, 'SIR நடவடிக்கைக்கு எதிரான மக்கள்' (People Against SIR) என்ற தேசிய அளவிலான கூட்டமைப்பின் ஒரு பகுதியாகச் செயல்பட்டு வருகிறது. இதில் பல்வேறு மக்கள் அமைப்புகள், சமூக இயக்கங்கள் மற்றும் அரசியல் சார் பற்ற தனிநபர் செயல்பாட்டாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்த அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், அரசியல் பொருளாதார நிபுணர் பரகால பிரபாகர், கர்நாடக இசைப் பாடகரும் எழுத்தாளரும் ரமோன் மகசேசே விருது பெற்றவருமான டி.எம். கிருஷ்ணா, அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் தாமஸ் பிராங்கோ மற்றும் கலாசார, அரசியல் செயல்பாட்டாளரும் IYCC அமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளருமான ராதிகா கணேஷ் ஆகியோர் தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

இவ்வளவு அதிகமான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பது ஜனநாயக நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் இந்த விவகாரத்தில் இந்தியத் தேர்தல் ஆணையம் உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்.

அரசியல் பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர் பேசுகையில், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கையை முழுமையாகக் கைவிட வேண்டும் என்றும், இதன் மூலம் நீக்கப்பட்ட தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரின் பெயர்களையும் மீண்டும் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

த.வெ.க. அரசைக் கண்டித்து தூய்மைப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்!

சென்னை, நவ.12-

தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகளின் தூய்மைப் பணிகளை தனியாருக்கு தாரை வார்க்கும் அரசாணையை ரத்து செய்யக் கோரி தூய்மைப் பணியாளர்கள் சென்னையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தூய்மை பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு, மாநகராட்சிகளின் தூய்மைப் பணிகளை தனியாருக்கு தாரை வார்க்கும் அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், வாக்குறுதிகளை நிறைவேற்றாத தவெக அரசைக் கண்டித்தும் உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒரு வாரத்திற்குள் அரசு பேச்சுவார்த்தை நடத்த முன்வராவிட்டால், தங்களின் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

கள்ளக்குறிச்சி பெண் மாவட்ட ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய

அருள் விக்னேஷ் எம்.எல்.ஏ. மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. புகார் மனு!

கள்ளக்குறிச்சி, நவ.12 -

கள்ளக்குறிச்சி த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ், மாவட்ட ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியது தொடர்பான செய்திகள் சமூக வலை தளங்களில் பரவி வந்த நிலையில் அதை ஆய்வு செய்து கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோரி கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மனு வழங்கினார்.

அப்போது கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர். வசந்தவேல் மற்றும் கழக



நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்,

இதனை தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது,

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக சமூக வலைதளங்கள் மற்றும் பல்வேறு ஊடகங்களில் கடந்த இரண்டு நாட்களாக தகவல் பரவி வருகிறது, ஒரு மாவட்ட ஆட்சியருக்கு பாதுகாப்பு இல்லாத நிலை என்பது வெட்கக்கேடான விஷயம், ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வாக இருப்பதால் இதில் உண்மையை ஆராய முடியாது எனவே இது சம்பந்தமான வழக்கை உடனடியாக சி.பி.கி.ஐ.டி. அல்லது சி.பி.ஐ. வசம் ஒப்படைக்க வேண்டும்,

அப்பொழுதுதான் உண்மை தெரியும், மாவட்ட ஆட்சியர் புகார் அளித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ராஜ்மோகன் கூறுவது நடக்கக்கூடிய விஷயமா, ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. மீது மாவட்ட ஆட்சியர் புகார் கொடுத்தால் அவர் இந்த மாநிலத்தில் இருக்க முடியுமா, தன் மீது தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர்தான் அவதூறு பரப்புகிறார்கள் என்று சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ் கூறுகிறார், அவர் மீது அவதூறு பரப்ப வேண்டிய வேலை தி.மு.க.விற்கு கிடையாது, நீங்கள் தவறு செய்திருந்தால் அதற்கான தண்டனையை நீங்கள் அனுபவித்துத்தான் ஆக வேண்டும், இந்த சம்பவம் தமிழகத்துக்கே வெட்கக்கேடான விஷயம் என்று கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார், மேலும் இச்சம்பவம் தொடர்பாக மகளிர் அணி சார்பில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டமும் நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், நேற்று முன்தினம் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷஹ்னாஸ் அவர்களை நேரில் சந்தித்து, கள்ளக்குறிச்சி த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வாட்ஸ் அப் மூலம் ஆபாச மெசேஜ் அனுப்பியதாக சமூக வலைதளம் மற்றும் ஊடகங்கள் வாயிலாக செய்தி பரவியதை தொடர்ந்து, அச்செய்தியின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கிட வேண்டும் எனவும் கோரிக்கை மனுவினை வழங்கினார், இந்த நிகழ்வின் போது உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர்.வசந்தவேல் மற்றும் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உட்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என அனைவரும் உடன் இருந்தனர்.

செஞ்சி மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர்

பி.கே.பச்சையப்பன் சாலை விபத்தில் உயிரிழப்பு!

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் அஞ்சலி!

செஞ்சி, நவ. 12

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளராக பணியாற்றி வந்தவர் பரதன்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த பி.கே. பச்சையப்பன் வயது 72.

இவர் தனது இருசக்கர வாகனத்தில் பரதன்தாங்கல் கிராமத்திலிருந்து செஞ்சிக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது செஞ்சியிலிருந்து திருவண்ணாமலை நோக்கி சென்ற பூபாலன் என்பவரின் இருசக்கர வாகனம் எதிர்பாராத விதமாக மோதியதில் பச்சையப்பனுக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

108 ஆம்புலன்ஸ் மூலம் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பரிசோதனை செய்ததில், அவர் விபத்து நடந்த இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட தி.மு.க.வினர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று விபத்தில் உயிரிழந்த பச்சையப்பன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மேலும் விபத்து குறித்து உரிய விசாரணை செய்ய வேண்டும் என காவல்துறையினருக்கு அவர்கள் அறிவுறுத்தினர்.

சாலை விபத்தில் உயிரிழந்த பி.கே. பச்சையப்பன் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளராக பணியாற்றி வந்ததுடன், இரண்டு முறை செஞ்சி ஒன்றிய குழு உறுப்பினராகவும், செஞ்சி ஒன்றிய அவைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

இவருக்கு ஆசிரியை விஜயா என்ற மனைவியும், வினோதினி என்ற மகளும், தர்மராஜ், நாராயண கண்ணன் ஆகிய இரண்டு மகன்களும் உள்ளனர். மகள் வினோதினி, மகன் தர்மராஜ் ஆகியோருக்கு திருமணம் ஆகிவிட்ட நிலையில், இளைய மகன் நாராயண கண்ணனுக்கு வரும் 20.12.26 அன்று திருமணம் நடக்க உள்ள நிலையில் மகனின் திருமணத்திற்கான பத்திரிகை கொடுக்கின்ற பணியில் ஈடுபட்டிருந்தபோது ஒன்றிய செயலாளர் பி.கே. பச்சையப்பன் விபத்தில் உயிரிழந்த சம்பவம் அவரது குடும்பத்தாருக்கும், தி.மு.க. நிர்வாகிகளுக்கும் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



வேலூர் மாவட்ட – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.எம்.தேவராஜ் அவர்களின் 28 வது நினைவு நாளை முன்னிட்டு மாநகர தி.மு.க. அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த அவரது உருவப் படத்திற்கு மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் வி.எம்.டி.ஏ.பாலாஜி மற்றும் பகுதி செயலாளர்கள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.